DINAMANI
தினமணி
11 ஜனவரி 2009
Page # 3

# அமெரிக்க பல்கலையில் படிக்க தமிழக மாணவர்கள் தேர்வு

சென்னை, ஜன. 10: அமெரிக்காவில் உள்ள மிசௌரி மற்றும் ஃப்ளோரிடா பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பு பயில தமிழகத்தைச் சார்ந்த ஏழு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

சென்னை மற்றும் கோவையில் உள்ள பார்க் குளோபல் ஸ்கூல் ஆஃப் பிஸினஸ் எக்சலன்ஸ் கல்வி நிறுவனத்தில் முதுகலை பட்டப் படிப்பு முதலாமாண்டு படித்து வரும் மாணவர்கள் இதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அமெரிக்காவில் தங்கள் இரண்டாம் ஆண்டு படிப்பினைத் தொடர தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு மாணவர்களிடம் பெறப்படும் மும்மடங்கு கூடுதல் கட்டணம் இம் மாணவர்களிடம் வசூலிக்கப்படாது. அமெரிக்க மாணவர்களுக்குரிய இயல்பான கட்டணம் மட்டுமே வசூலிக்கப்படும்.

பயிற்சி முடித்த மாணவர்களுக்கு ஆறு மாத கால உதவித் தொகையுடன் அமெரிக்க வேலை வாய்ப்பும் வழங்கப்படும். இவர்களுக்கு பார்க் குளோபலின் முதுகலைப் பட்டமும், மிசௌரி பல்கலையின் எம்பிஏ பட்டமும் வழங்கப்படும்.